**பள்ளிக்கல்வித்துறை**

**திருச்சிராப்பள்ளி**

# முசிறி கல்வி மாவட்டம்

# 10

# தமிழ்

## பொதுத்தேர்வு சிறப்பு கையேடு

## 2011-2012

வெளியீடு

**மாவட்ட கல்வி அலுவலர், முசிறி**

www.kalvisolai.com

# ஆக்கம்

இந்த கையேடு உருவாக ஆசிரியர்களுக்கு நல்லதொரு பயிற்சியும், விடா முயற்சியும், மாணவர்கள் நலனில் அக்கறைக் கொண்டும், தொலைநோக்குப் பார்வையில் இருக்கும் எங்கள் முசிறி, கல்வி மாவட்டத்தின் மாவட்டக் கல்வி அலுவலர் மதிப்பிற்குரிய உயர்திரு. **V.*ஜெயக்குமார்***, **M.A.,B.Ed.,M.Phil.,** அவர்களுக்கு தமிழ் மன்றத்தின் சார்பாக நன்றியினை உரித்தாக்கி கொள்கின்றோம்.

இக்கையேட்டில் ஏதேனும் பிழைகள் மற்றும் குறைகள் இருப்பின் அதனை பாடநூல் மற்றும் ஆசிரியர்கள் மூலம் சரிசெய்து கொள்ளுமாறு மாணவ / மாணவியர்களாகிய உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

## குழுத்தலைவர்

**திரு.V.ஜெயக்குமார், M.A., B.Ed., M.Phil.,**
மாவட்டக்கல்வி அலுவலர், முசிறி.

### கையேடு மேலாய்வாளர்கள்

**திரு.L.கோவிந்தராஜன் M.A.,M.Ed.,**
தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சுக்காம்பட்டி

**திரு. ப.முல்லைவேந்தன்,M.A., M.Ed**
தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
நாச்சம்பட்டி.

### ஆசிரியர் குழு உறுப்பினர்கள்

**கு. செல்லதுரை,** தமிழாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, அலகரை.

**தி.கீதா,** தமிழாசிரியை,
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, முசிறி.

**மு.கி.சிவானந்தம்,** தமிழாசிரியர்,
அரசு பெண்கள் மேநிப, தா. பேட்டை.

**த. பாஸ்கர்,** தமிழாசிரியர்,
அரசு பெண்கள் மேநிப, துறையூர்.

**கோ. நாகேஸ்வரன்,** தமிழாசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, பாலசமுத்திரம்.

**வி. அகிலாண்டேஸ்வரி,** தமிழாசிரியை,
அமலா பெண்கள் மேநிப, முசிறி.

**சி. தேவராசு,** தமிழாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, சிறுநாவலூர்.

**ரா. சுப்பிரமணியன்,** தமிழாசிரியர்
அரசு பெண்கள் மேநிப, தொட்டியம்

**சி. முரளி,** தமிழாசிரியர்,
ஜே.எப்.. மேல்நிலைப்பள்ளி, புலிவலம்.

**ரெ. சரவணன்,** தமிழாசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, மூவானூர்.


www.kalvisolai.com

# தமிழ் முதல் தாள்
## பிரிவு–I
## பகுதி: 1

### I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. செல்வத்தை நிலையாகக் கட்டும் கயிறாக வள்ளுவர் கூறுவது
   அ) ஒழுக்கம் **ஆ) காலமறிதல்**
   இ) அடக்கமுடைமை ஈ) பெரியோரைத் துணைக்கோடல்
2. கண்ணகியின் காற்சிலம்பில் உள்ள பரல்கள்
   அ) முத்து ஆ) பவளம் **இ) மாணிக்கம்** ஈ) மரகதம்
3. கம்பரை புரந்தவர்
   அ) ஔவையார் ஆ) புகழேந்தி **இ) சடையப்ப வள்ளல்** ஈ) சீதக்காதி
4. பெண் அடிமையானதற்கு உரிய காரணங்களுள் ஒன்று இல்லாமை
   அ) வாக்குரிமை ஆ) பேச்சுரிமை **இ) சொத்துரிமை** ஈ) எழுத்துரிமை
5. கீழ்க்காண்பனவற்றுள் காந்தியடிகளின் மனங்கவர்ந்த குஜராத்திப் பாடலின் கருத்து
   **அ) இன்னாசெய்யாமை** ஆ) இன்சொல் கூறுதல் இ) எளிமை ஈ) சிக்கனம்
6. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை
   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை **இ) பேச்சுக்கலை** ஈ) நடனக்கலை
7. கூவா முன்னம் இளையோன் குறுகிநீ
   ஆவான் யார்என அன்பின் இறைஞ்சினான் - இப்பாடல் அடிகளில் அமைந்துள்ள நயம்.
   **அ) எதுகை** ஆ) இயைபு இ) முரண் ஈ) அணி
8. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
   **அ) ஜி.யு. போப்** ஆ) கால்டுவெல்
   இ) இராபர்ட் டி நோபிலி ஈ) வீரமாமுனிவர்
9. நெய்தல் கலியைப் பாடியவர்
   அ) ஓரம்போகியார் ஆ) கபிலர் **இ) நல்லந்துவனார்** ஈ) பரணர்
10. சேக்கிழார் பெருமான் அருளியது
    அ) சிவபுராணம் **ஆ) பெரியபுராணம்** இ) தலபுராணம் ஈ) நளவெண்பா
11. மாணிக்கவாசகர் பாடல்கள்__________ திருமுறையில் இடம்பெற்றுள்ளன
    அ) ஆறாம் **ஆ) எட்டாம்** இ) மூன்றாம் ஈ) ஐந்தாம்
12. இளங்கோவடிகள் __________ நாட்டைச் சேர்ந்தவர்
    அ) சோழ நாடு **ஆ) சேர நாடு** இ) பாண்டிய நாடு ஈ) கேரள
13. நற்றிணையைத் தொகுப்பித்தவர்
    **அ) பன்னாடு தந்த மாறன் வழுதி** ஆ) இளம்பெருவழுதி
    இ) உக்கிர பெருவழுதி ஈ) ஔவையார்
14. திருக்குறள் __________ வெண்பாக்களால் ஆன நூலாகும்
    அ) சிந்தியல் **ஆ) குறள்** இ) நேரிசை ஈ) இன்னிசை
15. நற்றிணை __________ நூல்களை சார்ந்தது
    அ) பத்துப்பாட்டு **ஆ) எட்டுத்தொகை** இ) பதிணென்கீழ்கணக்கு ஈ) ஐம்பெரும்
16. அழுது அடியடைந்த அன்பர் என அழைக்கப்படுபவர்
    **அ) மாணிக்கவாசகர்** ஆ) திருநாவுக்கரசர் இ) சுந்தரர் ஈ) அப்பர்
17. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர்
    அ) கவிமணி ஆ) பாரதிதாசன் **இ) பாரதியார்** ஈ) நாமக்கல் கவிஞர்
18. திறனறிந்து தேர்ந்து கொள்ள கூடியவர்
    அ) அன்புள்ள பெற்றோர் ஆ) ஆர்வமுள்ள நண்பர்
    **இ) மூத்த அறிவுடையோர்** ஈ) இனிய உறவினர்
19. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல்
    அ) நால்வர் நான்மணிமாலை **ஆ) திருவள்ளுவமாலை** இ) இரட்டை மணிமாலை
20. இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே எனப்பாடியவர்
    அ) பாரதியார் ஆ) சுரதா **இ) பாரதிதாசன்**
21. ஏலாதி _____________ நூல்களுள் ஒன்று
    அ) பதினெண்மேற்கணக்கு **ஆ) பதினெண்கீழ்க்கணக்கு** இ)காப்பியம்
22. கணிமேதாவியாரின் காலம்
    **அ)கடைச் சங்ககாலம்** ஆ) சங்கம் மருவிய காலம் இ)இடைக்காலம்
23. மருந்துப் பொருட்களால் அமையப்பெற்ற இருநூல்கள்
    அ) திருக்குறள், நற்றிணை **ஆ) திரிகடுகம், ஏலாதி** இ) நற்றிணை, அகநானூறு
24. பதினாறு செவ்வியல் தன்மைகளைக்கொண்டது செம்மொழி எனக் கூறியவர்
    அ) திரு.வி.க ஆ) உ.வே.சா **இ) பாவாணர்**
25. இன்றைய மதுரையில் _____________ தமிழ்ச்சங்கம் இருந்தது.
    **அ) மூன்றாம்** ஆ) இரண்டாம் இ) முதலாம்
26. சரசுவதி அந்தாதி _____________ இயற்றிய நூல்களுள் ஒன்று.
    **அ) கம்பர்** ஆ) ஒட்டக்கூத்தர் இ) புகழேந்தி


www.kalvisolai.com

27. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது
அ) பத்ம ஸ்ரீ **ஆ) பாரதரத்னா** இ) பத்மவிபூஷண்
28. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர்
**அ) பேரறிஞர் அண்ணா** ஆ) மு.வரதராசனார் இ) கா.அப்பாத்துரையார்

## பகுதி : 2

### கோடிட்ட இடத்தை நிரப்பு

1. தம்மை அடைக்கலமாகக் கொண்டவரின் துயரை நீக்குதலே **செல்வம்** என நற்றிணை குறிப்பிடப்படுகிறது.
2. பெரியபுராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் **திருத்தொண்டர் புராணம்.**
3. "திகழ்பா ஒரு நான்குஞ் செய்யுள் வரம்பாகப் புகழ்பா வினங்கள் மடைப் போக்கா" இப்பாடல் அடிகளில் செய்யுளின் வரம்புகளாக குறிப்பிடப்படுபவை **நால்வகைப் பாக்கள்.**
4. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் **பொருளியல்** பேராசிரியராகப் பணியாற்றினார்.
5. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு **வேடிக்கையாய்** இருக்கும்.
6. தமிழர்கள் நிலத்தை **ஐந்து** வகைகளாகப் பிரித்துக்காட்டியிருக்கிறார்கள்.
7. பாடற் கலிங்கமழித் தாயிர மானை கொன்ற பாடற் கரிய பரணியும் -இப்பாடல். அடிகளில் குறிப்பிடப்படும் பரணி நூல் **கலிங்கத்துப்பரணி.**
8. குடும்ப விளக்கு **பாரதிதாசன்** படைத்த குறுங் காவியங்களுள் ஒன்று.
9. கம்பராமாயணம் **ஆறு** காண்டங்களை உடையது.
10. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் **சீதக்காதி.**
11. புரட்சிக்கவிஞர் என அழைக்கப்படுபவர் **பாரதிதாசன்** ஆவார்.
12. பணை என்னும் சொல்லின் பொருள் **மூங்கில்.**
13. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் **திருப்பெருந்துறையில்** உள்ளது.
14. அரி என்னும் சொல்லின் பொருள் **நெற்கதிர்.**
15. நந்திக் கலம்பகம் **96** வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
16. கைகேயியின் தோழி **மந்தரை** ஆவாள்.
17. நற்றிணை ஒன்பதடி சிற்றெல்லையும் **பன்னிரெண்டு** அடி பேரெல்லையும் கொண்ட நூல்.
18. கண்ணகனார் **கோப்பெருஞ்சோழனின்** அவைக்களப்புலவர்களுள் ஒருவர்.
19. திருநாவுக்கரசரின் தமக்கையார் **திலகவதியார்** ஆவார்.
20. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் **திருவாதவூர்**
21. மாணிக்கவாசகர் **அரிமர்த்தன பாண்டிய** மன்னரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்
22. திருவாசகத்திற்கு உருகார் **ஒருவாசகத்திற்கும்** உருகார்.
23. திருக்குறளில் **133** அதிகாரங்களும் **1330** குறட்பாக்களும் உள்ளன.
24. ஒழுக்கத்தின் எய்துவர் **மேன்மை** இழுக்கத்தின்
எய்துவர் **எய்தாப்** பழி
25. தமிழர் மனித வாழ்வை **அகம், புறம்** எனப் பிரித்தனர்
26. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி **தமிழ்**
27. 2004 ஆம் ஆண்டு **அக்டோபர்** திங்களில் தமிழ் மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.
28. தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் **மாக்சுமுல்லர்** ஆவார்
29. இரட்டைக்காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரம், **மணிமேகலையும்** ஆகும்.
30. சிலப்பதிகாரம், மணிமேகலை, **சீவகசிந்தாமணி,** வளையாபதி, **குண்டலகேசி** என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்
31. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள **பெருநோய்** ஒன்று உண்டு
32. பெரியார் சமூக **முரண்களை** எதிர்த்தவர், மூடக்கருத்துக்களை **முட்டறுத்தவர்.**
33. வெறும் பேச்சுக்கும், **மேடைப்** பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
34. பேச்சுமுடிவில் **சுருக்கத்தைக்** கூறி கருத்தை நிலைநாட்டி முடிக்க வேண்டும்.
35. நடிப்பாற்றல் மிக்கவரையும், நடிப்பைக் கற்று தருபவரையும் **இயக்குநர்** என அழைப்பர்.
36. படப்பிடிப்புக்கருவியை **நகர்த்தும் வண்டியில்** பொருத்துவதும் உண்டு.
37. போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர் **அதிவீரராம பாண்டியன்**
38. போலிப்புலர்வர்களின் தலையை வெட்டுபவர் **ஒட்டக்கூத்தர்.**
39. இல்லாரை **எல்லாரும்** எள்ளுவர்
40. அறனீனும், இன்பமும் ஈனும் **திறனறிந்து** தீதின்றி வந்த பொருள்.
41. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் **தேவாரம்** என அழைக்கப்படுகிறது.
42. அனைத்தையும் இழப்பினும் உண்மையை இழக்கிலேன் எனக் கூறியவர் **அரிச்சந்திரன்**


www.kalvisolai.com

43. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் **தால்சுதாய்**
44. தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் **குடி** போன்றிருந்தேனே.
45. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் **திருவாய்மொழி** குலசேகரர் பாடியதாகும்.
46. இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் **வடலூர்.**
47. இராமலிங்கர் தமிழ்மொழியே **இறவாத நிலை** தரும் என்று கருதினார்.
48. சங்ககாலத்தில் பெண்கள் **கடல்** கடந்து செல்லக்கூடாது.
49. நாள்தோறும் கல்வியில் **புதுப்புது துறைகள்** உண்டாகிக் கொண்டிருக்கின்றன.
50. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும், **எழுத்துத்** தேர்வும் உண்டு.

## பகுதி : 3

### பொருத்துக

1. **நூல்** - **ஆசிரியர்**

| | | |
|---|---|---|
| தேவாரம் | - | திருநாவுக்கரசர் |
| சீறாப்புராணம் | - | உமறுப்புலவர் |
| கலித்தொகை | - | நல்லந்துவனார் |
| பூத்தது மானுடம் | - | சாலை இளந்திரையன் |

2. **சொல்** - **பொருள்**

| | | |
|---|---|---|
| மேதி | - | எருமை |
| சந்தம் | - | அழகு, (ஓசை நயம்). |
| கோதில் | - | குற்றம் இல்லாத |
| அங்கணர் | - | சிவன் |

3. **சொல்** - **பொருள்**

| | | |
|---|---|---|
| செறு | - | வயல் |
| வித்து | - | விதை |
| யாணர் | - | புதுவருவாய் |
| வட்டி | - | பனையோலைப் பெட்டி |

4. **சொல்** - **பொருள்**

| | | |
|---|---|---|
| கான் | - | காடு |
| உழுவை | - | புலி |
| மடங்கல் | - | சிங்கம் |
| எண்கு | - | கரடி |

5. **சொல்** - **பொருள்**

| | | |
|---|---|---|
| விரை | - | மணம் |
| கழல் | - | அணிகலன் |
| ததும்பி | - | பெருகி |
| மெய் | - | உடல் |

## பகுதி-4

### தொடர்களுக்கேற்ற வினா அமைக்க:-

1. **இலக்கணம் வகுத்த பின்பே இலக்கியங்கள் தோன்றின.**
   1. எது வகுத்த பின் இலக்கியங்கள் தோன்றின? (அ)
   2. இலக்கியங்கள் எப்போது தோன்றின?
2. **இராமலிங்கர் தமிழ் மொழியை இறவாத நிலை தரும் என்று கூறினார்.**
   தமிழ் மொழியை இறவாத நிலை தரும் என்று கூறியவர் யார்?
3. **தமிழர்கள் அரபு நாட்டுடனுன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.**
   தமிழர்கள் எந்த நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்?
4. **தொழில் நுட்ப பயிலகத்தில் பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.**
   எவற்றில் பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?
   எதில் (அ)எவற்றில் பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?
5. **பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.**
   பெண்கள் எதனைப் பெற்று புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்புகிறார் பெரியார்?
6. **பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.**
   எந்தப் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்?
7. **செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நாம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்.**
   எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நாம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்?
8. **திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப்படக் கருவி பயன்படுகிறது?**
   திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது?
9. **திரைப்படம் எடுப்பதைவிட செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.**
   திரைப்படம் எடுப்பதைவிடச் எப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?
10. **நடிப்புக்கலையையும், அரசியலையும் தன் இரு கண்களாக எம்.ஜீ.இராமச்சந்திரன் கருதினார்.**
    எம்.ஜீ.இராமச்சந்திரன் தன் இரு கண்களாக் எவற்றைக் கருதினார்?


www.kalvisolai.com

11. **காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.**
    பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் என எதைக் காந்தியடிகள் கருதினார்?
12. **இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைத்தல் வேண்டும்.**
    இளைஞர்களின் உள்ளத்தில் எவை வளரும் வகையில் கல்வி அமைத்தல் வேண்டும்?
13. **இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலை கல்வியில் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.**
    இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலை கல்வியில் பட்டம் பெற்றிருந்தால் எப்பணியில் சேரலாம்?

## பிரிவு:II

## பகுதி:1

## செய்யுள் - குறுவினாக்கள் ( 2 மதிப்பெண்கள்)

### இயல் - 1

1. **உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**
    - உயினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்.
    - ஏனெனில் அது ஒருவனுக்கு எல்லாச் சிறப்புகளையும் தருகிறது.
2. **ஒழுக்கத்தினால் எய்துவது எது? இழுக்கத்தினால் எய்துவது எது?**
    - நல்லொழுக்கத்தால் மேன்மை அடைவர்.
    - தீய ஒழுக்கத்தால் பெரும் பழியை அடைவர்.
3. **நன்றிக்கு வித்தாவது எது?**
    - நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கம்.
4. **என்றும் இடும்பை தருவது எது?**
    - தீய ஒழுக்கமே என்றும் துன்பம் தருவது.
5. **பல கற்றும் கல்லார் அறிவிலார் - யார்?**
    - சான்றோர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடவாத கற்றவர் கல்லாதவரே ஆவார்
6. **கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்குவது யாது?**
    - பகற்பொழுதில் வலிமையான கூகையைக் காக்கை வென்று விடும்.
    - அதுபோல பகைவரை வெல்லக் கருதும் அரசர் காலம் அறிந்து செயல்பட வேண்டும்.
7. **ஞாலம் கருதினும் கைகூடும் - எப்போது?**
    - தான் செய்யும் செயலைக் காலம் அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தல் வேண்டும்
8. **ஊக்கம் உடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?**
    - ஆட்டுக்கிடா பகைவரைத் தாக்குவதற்குப் பின் வாங்குவது போன்றது
9. **செய்வதற்கரிய செயல் செய்வது எப்போது?**
    - தம்மால் அடைவதற்கு அருமையான காலம் கிடைக்கும் பொழுது செய்தல் வேண்டும்.
10. **கையுறைப் பொருள்களாகப் குகன் கொண்டு சென்றன எவை? யாருக்குக் கொண்டு சென்றான்?**
    - தேனும், மீனும் ஆகும்.
    - இராமனுக்குக் கொண்டு சென்றான்.
11. **குகன் இலக்குவனிடம் யாது கூறினான்?**
    - நான் படகோட்டும் வேட்டுவன்.
    - நாய் போல் தொண்டு செய்வேன் என்று கூறினான்.
12. **குகனின் வேண்டுகோள் யாது?**
    குகன் இராமனுக்குத் தன்னால் இயன்ற தொண்டினைச் செய்து கொண்டு அங்கேயே தங்கி இருக்க அனுமதி வேண்டினான்
13. **அன்புள்ள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம் - யார் யாரிடம் கூறியது?**
    இராமபிரான் குகனிடம் கூறியது.

### இயல் -2

1. **சிலம்பு உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?**
    அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
    உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.
    ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்
2. **ஐம்பெரும் காப்பியங்கள் என்பவை எவை?**
    - 1. சிலப்பதிகாரம், 2. மணிமேகலை, 3. சீவக சிந்தாமணி, 4. வளையாபதி, 5. குண்டலகேசி,
3. **பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?**
    கனக சுப்பு ரத்தினம்

### இயல் - 5

1. **அப்பூதியடிகளார் எத்தகைய பண்பாளர்?**
    களவு, பொய், காமம், சினம் முதலிய குற்றங்கள் நீங்கியவர்.



www.kalvisolai.com

2. **திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் கூறியது என்ன?**

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் நீர் வைத்துள்ள தண்ணீர்ப் பந்தலில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் என பெயர் வைத்துள்ளமைக்கு என்ன காரணம்? எனக் கேட்டார்.

3. **நும் பேர் எழுதாதே வேறொருவர் பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என் கொல்? யார் யாரிடம் கூறியது?**

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் கூறியது

4. **“இப்போது இங்கு அவன் உதவான்”- யார், யாரிடம் கூறியது?**

அப்பூதியடிகள், திருநாவுக்கரசரிடம் கூறியது.

**இயல் - 7**

1. **வன்மையுள் எல்லாம் தலை-எது?**

அறிவிற் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தல்

2. **செற்றார் செயக்கிடந்ததில்லை- யாருக்கு?**

அறிவிற் சிறந்த பெரியோரை சார்ந்து நடக்கவல்லாருக்கு பகைவர் செய்யக்கூடிய தீங்கு யாதொன்றும் இல்லை

3. **நல்லார் தொடர்பை கைவிடல் எத்தகையது?**

பலரோடு பகைத்துக் கொள்வதை விட பன்மடங்கு தீமை தரும்

4. **பொருள் அல்லரைப் பொருளாகச்செய்வது- எது?**

பொருட்செல்வம்

5. **வேந்தற்குரிய பொருட்கள் யாவை?**

அரசுரிமையால் வந்த பொருள்
மக்கள் வரியாகத் தந்த பொருள்
பகைவரை வென்றதால் வரும் திறைப் பொருள்

6. **தேவாரம் - பொருள் கூறு?**
   - தே + வாரம் - தெய்வத்தன்மையுடைய இசைப்பாடல்கள்
   - தே + ஆரம் - தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை
7. **சிவபெருமான் எத்தகையன்?**
   - எவருக்கும் அடிமையாகாத தன்மையன்
   - ஒரு காதில் சங்கினாலான குண்டலத்தை அணிந்தவன்

## இயல் - 9

1. **ஆற்றுதல் என்பது யாது?**
   - வருந்தி வந்தோருக்கு உதவுதல்
2. **பண்பு எனப்படுவது யாது?**
   - சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்
3. **அறிவு எனப்படுவது யாது?**
   - அறிவற்றவர்கள் கூறும் சொற்களைப் பொறுத்தல்.
4. **நந்திக்கலம்பக உறுப்புகள் நான்கினைக் கூறுக**
   - அம்மானை. ஊசல், மறம், தவம்
5. **நந்திவர்மனின் வீரம் எத்தகையது?**
   - நந்திவர்மனை எதிர்த்த அறிவற்ற மனனர் போரில் தம் உயிரை இழந்து தேவர் உலகத்தை ஆள்வர்
6. **நந்திக்கலம்பகம் யார் மீது பாடப் பெற்றது?**
   - பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பெற்றது
7. **ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?**
   - நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்
8. **குலசேகரர் எவ்வெவ் மொழிகளில் வல்லவர்?**
   - வடமொழி, தென்மொழி

## பகுதி 2

## உரைநடை

**இயல் - 1**

1. **தமிழ்மொழி குறித்து டாக்டர் எமினோ கூறுவது யாது?**
   - இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது என்பதாகும்.
2. **உலகில் உள்ள மொழிகளில் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?**
   - மூவாயிரம்
3. **தமிழ் மொழியின் தனித் தன்மைகளை எழுதுக**
   - இலக்கிய, இலக்கண வளம் கொண்டது
   - தனக்கென தனிநோக்கும், போக்கும் கொண்டது.



www.kalvisolai.com

## இயல் - 5

4. **மொழி மாற்றம் என்றால் என்ன?**
    - ஒரு மொழிப் படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறைக்கு மொழி மாற்றம் என்று பெயர்.
5. **கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?**
    - பல்வகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை, நேரில் காணமுடியாத பல இடங்கள்,ஆகியவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ள முடிகிறது.
6. **செய்திப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?**
    - உலகில் பல்வேறுபகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் படமாக்கிக் காட்டுவது செய்திப்படமாகும்

## இயல் - 6

7. **கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?**
    - குமரிமலை, ப∴ளி ஆறு
8. **ஏற்றுமதி, இறக்குமதி பற்றி கூறும் நூலகள் யாவை?**
    - பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி

## இயல் - 7

9. **ஞாலம் - பெயர்க்காரணம் கூறு**
    - ‘ஞாலம்’ என்னும் சொல் ‘ஞால்’ என்னும் சொல்லடியாகத் தோன்றியது
    - ஞால் என்பதற்கு தொங்குதல் என்று பெயர்
    - எவ்வித பற்றுக் கோடுமின்றி உலகம் தொங்கிக் கொண்டிருப்பதை இது உணர்த்துகிறது

10. **நோய் வருவதற்கான காரணங்கள் பற்றி வள்ளுவர் கூறுவது என்ன?**
    - உடலில் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றனுள் ஏதேனும் ஒன்றின் அளவு குறைந்தால் நோய் வரும்.

## இயல் - 8

11. **அமெரிக்க இதழாசிரியர் காந்தியடிகள் பற்றிக் கூறியது யாது?**
    - “சத்திய சோதனையில் தான் உலகம் உய்ய உற்றவழி இருக்கிறது” என்பதாம்.
12. **காந்தியடிகள் எதனை பாவம் என்கிறார்?**
    - “பகட்டான வாழ்க்கையைப் பாவம்” என்கிறார் காந்தியடிகள்
13. **காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத்திய பாடலின் கருத்து யாது?**
    - “தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை,தீமை செய்தவருக்கும் நன்மையே செய். உண்மைப் பொருண்மை உண்டு” என்னும் இப்பாடல் இன்னா செய்யாமை என்னும் கருத்தை அவருள் விதைத்தது
14. **இயேசுவின் மலைப்பொழிவு நூலைப் படித்து காந்தியடிகள் உணர்ந்தது என்ன?**
    - “தீயவனை எதிர்க்காதே; அவனிடமுள்ள தீமையை எதிர்த்து நில், பகைவனிடமும் அன்பு பாராட்டு” என்பதாகும்
15. **காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை?**
    - அன்பு, உண்மை, உறுதி, இன்னா செய்யாமை என்பனவாகும்
16. **காந்தியடிகளின் அறப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?**
    - கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு
17. **எவற்றை அறநெறியாகப்போற்ற வேண்டும் என காந்தியடிகள் கூறினார்?**
    - எளிமையையும்,சிக்கனமும் அறநெறியாகப்போற்ற வேண்டும் என காந்தியடிகள் கூறினார்
18. **இந்தியாவின் வாழ்வு குறித்து காந்தியடிகள் கூறுவது யாது?**
    - இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வு

## இயல் - 9

19. **இராமலிங்கர் எங்கு எப்போது பிறந்தார்?**
    - மருதூர், 05.10.1823
20. **வள்ளலாரின் முழக்கம் யாது?**
    - “அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணை”
21. **சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?**
    - சாதி மத வேறுபாடின்றி பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்

**இயல்-10**

22. **ஒவ்வொருவரும் குறைந்தது எக் கல்வித்தகுதியினைப் பெறுதல் வேண்டும்?**
    - மேல்நிலை கல்வித்தகுதியினைப் பெறுதல் வேண்டும்
23. **வேலைவாய்ப்பினை உருவாக்கித் தரும் அமுத சுரபியாக விளங்குபவை யாவை?**
    - மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியன
24. **தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை?**
    - உயிரி தொழில் நுட்பம்
    - நுண்ணியல் தொழில் நுட்பம்
    -



www.kalvisolai.com

**25. இடைநிலை ஆசிரியர் பயிற்சி குறித்து எழுதுக**

- மேல்நிலை கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள், இடைநிலை ஆசிரியர் கல்விப் பயிற்சியில் இரண்டாண்டுகள் படித்துத் தேர்ச்சி பெற்றால் இடைநிலை ஆசிரியராகப் பணியில் சேரலாம்.

## பிரிவு –III

## பகுதி – 1

## ஆறுவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க வேண்டிய 4 மதிப்பெண் வினா–விடைகள்

## செய்யுள்

1. **வாயிற் காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?**
   கொற்கை துறைமுகத்தின் தலைவனே வாழ்க!, பொதிய மலையின் தலைவனே வாழ்க! பழியில்லாத பஞ்சவனே வாழ்க! என்று வாழ்த்தினான்.
2. **சிலப்பதிகாரம் காட்டும் சோழ நாட்டுமன்னர்களின் சிறப்புகள் யாவை?**
   அடைக்கலமாக வந்த புறாவுக்காகத் தன் உடலையே தந்தான் சிபி.
   பசுவின் கன்றைக் கொன்ற தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றான் மனுநீதி.
3. **கண்ணகிக்குப் பாண்டிய நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது?**
   கள்வனைக் கொலை செய்வது கொடுங்கொல் அன்று. அதுவே அரச நீதி என்றான் பாண்டியன்.
4. **தமிழ்மொழி வளர்ச்சியடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிமுறைகள் யாவை?**
   பிறர் உதவி இல்லாமல் படிக்க நூல்கள் எழுத வேண்டும். தமிழை மதங்களுக்குள் அடக்கக் கூடாது. இலவச நூல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும்.
5. **செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?**
   எளிய நடையில் நூல்கள் எழுத வேண்டும். இலக்கண நூல் புதிதாக எழுத வேண்டும். புதிய சிந்நனைகளைப் படங்களுடன் நூல்களாக வெளியிட வேண்டும்.
6. **தமிழன் எதற்கு நாண வேண்டும்?**
   வறுமையினால் ஒரு தமிழன் படிக்கவில்லை என்றால் இங்குள்ள தமிழர் எல்லோரும் நாண வேண்டும்.
7. **சீதை இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன?**
   குகனின் கருத்தைக் கேட்ட இராமன் சீதையையும் இலக்குவனையும் பார்த்தான். பிறகு அவர்களிடம், “இவன் நம்மிடம நீங்காத அன்பு உடையவன்” என்று கூறினான்.
8. **விருத்த மாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?**
   குகன் கொண்டுவந்த தேனும், மீனும் அமுதத்தை விடச் சிறந்தவை. இவற்றை ஏற்றுக் கொண்டதே உண்டதற்குச் சமம் என்றான் இராமன்.
9. **தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.**
   அரசனால் பாராட்டப்படுவது செல்வம் அன்று யானை, தேர், குதிரை ஆகியவற்றில் செல்வதும் செல்வம் அன்று. அடைக்கலமாக வந்தவர்களைக் காப்பாற்றுவதே செல்வமாகும் என்றாள் தோழி.
10. **சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?**
    பொன், முத்து, பவளம், மாணிக்கம் ஆகியவை வேறுவேறு இடங்களில் பிறக்கும். ஆனால் மாலையாகக் கோர்க்கும்போது ஒன்று சேரும். அது போலச் சான்றோர் ஒன்றாகச் சேர்வர்.
11. **வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை?**
    பாவகை நான்கும் வயலின் வரப்புகள் ஆகும். அவை:வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.
12. **வயல்தரும் விளைவுகள் யாவை?**
    வயல்தரும் விளைபொருள்கள் நான்கு. அவை: அறம், பொருள், இன்பம், வீடு
13. **போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?**
    போலிப்புலவர்களின் தலையில் குட்டுபவர் அதிவீரராமபாண்டியன்
    செவியை அறுப்பவர் வில்லிப்புத்தூரார்
    தலையை வெட்டுபவர் ஒட்டக்கூத்தர்.
14. **கலித்தொகை – குறிப்பு எழுதுக.**
    எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.
    கலிப்பாவால் அமைந்தது.
    நாடகப்பாங்கில் அமைந்தது.
    ஐந்து பிரிவுகளை உடையது.
15. **கலம்பகம் - குறிப்பு எழுதுக.**
    ஒருவகைச் சிற்றிலக்கியம்.
    பலவகைப் பொருள்களைப் பாடுவது.
    கலம் + பகம் = கலம்பகம்
    18 உறுப்புகளைக் கொண்டது.
16. **நந்திவர்மனின் பெருமைகளாக நந்திக்கலம்பகம் கூறுவன யாவை?**
    முத்துக்களைக் கொடுத்து நெற்கதிரைக் கொண்டுவரும் காவிரி நாட்டின் தலைவன்.
    நந்திவர்மனை வணங்காத அரசர்கள் வானுலகைத்தான் ஆட்சி செய்வார்கள்.
17. **குலசேகர ஆழ்வார் திருவித்துவக் கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது?**
    இறைவனே! நீ எமக்கு அருள் புரியவில்லை என்றாலும் எனக்கு வேறு பற்று இல்லை. மன்னன் துன்பம் செய்தாலும் மக்கள் அவனையே நம்புவர். அதுபோல நானும் உன்னையே நம்புகிறேன்.

## பகுதி – 2

**ஆறுவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க வேண்டிய 4 மதிப்பெண் வினா-விடைகள் (உரைநடை)**

1. **பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?**
   பெண்கல்வி சமூக மாற்றத்துக்கு முக்கியம்.
   பெண்களுக்கு உலகப் படிப்பையும் ஆராய்ச்சிப்படிப்பையும், கொடுக்க வேண்டும்.
   பெண்களை பகுத்தறிவு இல்லாத சீவன்களாக வைத்திருப்பது பெருங்கொடுமை.
2. **பெண்ணுரிமையை விளக்குக.**
   பெண்கள் உரிமை பெற்று புது உலகைப் படைக்க வேண்டும். கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இருக்கக் கூடாது.
   சமூகத் தொண்டு செய்து புகழ்பெற வேண்டும்.
3. **மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?**
   மணக்கொடை ஒரு பெரு நோய். பெற்றோர் கல்விச் செலவை முதலீடாக எண்ணுகின்றனர்.
   அதை வட்டியுடன் வாங்கத் துடிக்கின்றனர். இளைஞர்கள் இதை ஒழிக்க வேண்டும்.
4. **பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?**
   நல்ல பேச்சுக்குத் தொடக்கமே அடித்தளம். சுருக்கமான முன்னுரையுடன் தொடங்க வேண்டும்.
   இடத்திற்கு ஏற்பத் தொடக்கவுரை அமைய வேண்டும்.
5. **பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.**
   பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் வகையில் முடித்தல்,
   கவிதையைக் கூறி முடித்தல், பாராட்டி முடித்தல்.
6. **கடல் வாணிகம் குறித்து எழுதுக**
   பொன், மணி, முத்து, துகில் ஆகியவற்றைக் கடல்வழியே அனுப்பினர்.
   கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுடன் கடல் வாணிகம் செய்தனர்.
   மன்னன் சாலமனுக்கு யானைத்தந்தமும், மயில் தோகையும் அனுப்பப்பட்டன.
7. **உழவுத் தொழில் குறித்து எழுதுக.**
   "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" - என்பது குறள். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" - என்பது புகழ் மொழி. வயல் மருத நிலம் ஆகும். அதன் தலைவனை வேந்தன் எனப் போற்றினர்.
8. **தமிழர் இசைக்கலையில் மேம்பட்டிருந்தனர் என்பதை நிறுவுக**
   **(இது நெடு வினாவாயினும் மாதிரி வினாத்தாளில் சிறுவினா பட்டியலில் இடம் பெற்றுள்ளது)**
   சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசையைப் பற்றிக் கூறுகின்றன. நரம்பின் மறை என்னும் நூலை தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். பாணன் பாடினி என்னும் கலைஞர்கள் இருந்தனர்.
   கர்நாடக இசைக்குத் தாய், தமிழிசையே.
9. **காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது – விளக்குக. (அல்லது)**
   **காந்தியடிகள் வாய்மையைக் கடைப்பிடிக்க அடிப்படையாக அமைந்த நிகழ்ச்சி எது?**
   காந்தி அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்தார். முனிவரின் சதியால் மனைவி, மகன் ஆகியோரைப் பிரிந்து சுடுகாட்டில் பணி செய்கிறான் அரிச்சந்திரன். அப்போதும் அவன் பொய் சொல்லவில்லை.
   தாமும் உண்மையே பேச முடிவு செய்தார் காந்தி.
10. **மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**
    நான் தேச பக்தனாக இருப்பதற்குக் காரணம் நான் மனித நேயத்துடன் இருப்பதுதான். நான் ஒரு குஜராத்தியன் என்பதைவிட இந்தியன் என்பதே பெருமைக்குரியது என்கிறார் காந்தி.
11. **தொழில்நுட்பக்கல்வி குறித்து எழுதுக.**
    பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றால் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் சேரலாம். இதில் பல துறைகள் உண்டு. இதில் படித்தால் இக்காலக்கட்டத்தில் வேலை வாய்ப்பு உண்டு.
12. **பட்டதாரி ஆசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகள் குறித்து எழுதுக.**
    மேல்நிலை வகுப்பு முடிந்ததும் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற வேண்டும். பிறகு இளம் கல்வியியல் பட்டம் பெற்றால் பட்டதாரி ஆசிரியராகப் பணி பெறலாம்.
13. **சிறுதொழில்பயிற்சி பற்றிக் குறிப்பு எழுதுக.**
    பத்தாம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றாலும், பெறாவிட்டாலும் தொழில்பயிற்சி நிறுவனத்தில் சேரலாம். ஒராண்டு அல்லது ஈராண்டு பயிற்சி பெறலாம். கம்மியர், கடைசல் படிப்பவர் போன்ற வேலைகளைப் பெறலாம்.
14. **இராணுவம், காவல் முதலிய பணிகளில் சேர்வதற்கான தகுதிக் கூறுகள் யாவை?**
    பனிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும். முதலில் உடற்கூறுத் தேர்வு நடைபெறும்.
    பிறகு எழுத்துத் தேர்வு நடைபெறும். இவற்றில் தேர்ச்சிப் பெற்றால் பணியில் சேரலாம்.

## பிரிவு – IV (மதிப்பெண்கள் : 10)

1. **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தித்திக்குத் தெள்ளமுதாய், தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப்படுந் தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

**வினாக்கள்**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
2. முத்தமிழ் - இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.



www.kalvisolai.com

3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
4. உவந்துரைக்கும் - பிரித்தெழுதுக.
5. விளம்பக்கேள் - பொருள் கூறுக.

(இது போல வேறு சில பாடல்களைக் கொடுத்து பயிற்சி அளிக்கவும்)

**2. கீழ்கானும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

வினையே ஆடவர்குயிர் என்கிறது குறுந்தொகை முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டும் எனவும், பெண்கள் கடல்கடந்து செல்லக்கூடாது எனவும் கூறி வந்தனர். இன்று, இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில் இருவரும் வருவாய் ஈட்டினால்தான் குடும்பத்தைச் சிறப்பாக நடத்த இயலும்.

பள்ளிக்கல்வியை முடித்த ஒருவர், அதற்குமேல் என்னென்ன படிப்புகளை மேற்கொண்டு வேலைவாய்ப்பினைப் பெறலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஒவ்வொருவரும் பெறவேண்டும்.தற்போது மேனிலைக்கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை என்னும் நிலை உருவாகியுள்ளது.

**வினாக்கள்**

1. ஆடவர்க்குயிராகக் குறுந்தொகை எதைக் குறிப்பிடுகிறது?
2. முந்நீர் - இந்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
3. மகடூஉ - இச்சொல்லின் பொருள் யாது?
4. தற்போது பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படையாக அமையும் கல்வி எது?
5. இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பைத் தருக.

**(இது போல வேறு சில உரைநடைப்பகுதிகளாகக் கொடுத்து பயிற்சி அளிக்கவும்)**

## பிரிவு: V

## பகுதி: 1 செய்யுள் நெடுவினா

**1. 'தேரா மன்னா' என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?**

1. நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்று உண்டு.
2. சிபி, மனுநீதிச் சோழன் வாழ்ந்த புகார் எனது ஊர்.
3. எனது சிலம்பை விற்க முயன்று உன்னால் கொல்லப்பட்டான் கோவலன்.
4. அவன் மனைவி நான். என் பெயர் கண்ணகி

**2. கண்ணகிக்கும், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.**

மன்னன் : நீ யார்?
கண்ணகி : எனது சிலம்பை விற்க முயன்று உன்னால் கொல்லப்பட்டான் கோவலன். அவன் மனைவி நான். கண்ணகி என் பெயர். சிபி, மனுநீதிச் சோழன் வாழ்ந்த புகார் எனது ஊர்.
மன்னன் : கள்வனைக் கொல்வது அரசநீதி
கண்ணகி : என் சிலம்பு மாணிக்கப் பரல்கள் உடையது.
மன்னன் : என் சிலம்பு முத்துப்பரல்கள் உடையது.
(சிலம்பை உடைத்தாள் கண்ணகி)
நானே கள்வன். என் வாழ்நாள் அழியட்டும்.

**3. பெரியோரைத் துணைக்கோடல்**

1. அறநெறி அறிந்தோர் நட்பினைக் கொள்ளுதல் வேண்டும்.
2. துன்பம் வராமல் காப்பவரை நட்பாக்கிக் கொள்ள வேண்டும்.
3. தீயனவற்றைக் கண்டால் இடித்துத் திருத்துபவரின் உறவைப் பெற வேண்டும்.
4. நல்லவர் நட்பைக் கைவிடுதல் பலரை பகைப்பதற்கு ஒப்பாகும்.

**உரைநடை நெடுவினா**

**1. தமிழ் செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகள் யாவை?**

1. உலகம் தோன்றிய போதே, தோன்றியது தமிழ்.
2. பிற மொழி துணையின்றி இயங்கும்.
3. திராவிட மொழிகளின் தாய்.
4. இது முத்தமிழ் - இயல், இசை, நாடகம்.
5. உயர் சிந்தனை : யாதும் ஊரே யாவரும் கேளிர்
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்

**2. தொழில் கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து எழுதுக.**

<u>தொழில் கல்வி</u>

1. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம்
2. 12ம் வகுப்பு தேர்ச்சி அடைந்தால் இக்கல்வி பெறலாம்.
3. சுற்றுச் சூழல், வேளாண்மை, வேதியியல், விலங்கியல் - சிறந்த வேலை வாய்ப்புத் துறைகள்.

<u>தொழில் நுட்பக் கல்வி</u>

10ம் வகுப்பு தேர்ச்சி அடைந்தால் இக்கல்வி பெறலாம்.
12ம் வகுப்பு தேர்ச்சி அடைந்தால் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெறலாம்.

**பகுதி: 2**

**மனப்பாடச்செய்யுள் (முழுவதும்) பயிற்சி அளிக்கவும் 2+2+6=10**

# தமிழ் இரண்டாம் தாள்

**பிரிவு – I பகுதி : 1**

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக பகுதி (இலக்கணக் குறிப்பு)**

(5 வினாவும், 4இல் சரியானவிடையைத் தேர்தெடுத்து எழுதுவதாக இருக்கும்)

1. **வினைத்தொகைச் சொற்கள்**
செய் தொழில்
பொங்குகடல்
உகுநீர்
செய்வினை
எண்குழவி
செய்கொல்லன்
வருபுனல்
பொழிதருமணி
நிதிதரு கவிதை

2. **உம்மைத் தொகைச் சொற்கள்**
தாய் தந்தை
காய்கறி
முத்து பவளம்

3. **ஒரு பொருட் பன்மொழி**
எங்கள் வீடு ஊரின் நடுமையத்தில் உள்ளது
குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து உள்ளது
உயர்ந்தோங்கிய மலையைக் கண்டேன்
மீமிசை ஞாயிறு
மதுரையைத் தீயழல் சூழ்ந்தது
வானம் செஞ்சிவப்பாய் காணப்பட்டது

4. **இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் யாது?**

| ஐகாரக்குறுக்கம் | ஔகாரக்குறுக்கம் | மகரக்குறுக்கம் |
|---|---|---|
| திண்ணை | வௌவால் | வரும் வண்டி |
| வளையல் | ஔவை | போன்ம் |
| தலைவன் | | மருண்ம் |

5. ________________ கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றை தேர்ந்தெழுதுக
இறந்தகால இடைநிலை **(த் ட் ற் இன்)**
வந்தான்
கண்டான்
சென்றான்
நிகழ்கால இடைநிலை **(கிறு கின்று ஆநின்று)**
வருகிறான்
வருகின்றான்
செல்கிறான்
செல்கின்றான்
எதிர்கால இடைநிலை **(ப் வ்)**
படிப்பான்
வருவான்

**பகுதி: 2**

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க**

6. **புணர்ச்சி பகுதியில் அமையும்**
மரவேர் என்பது கெடுதல் விகாரம்
வாழைப் பழம் என்பது தோன்றல் விகாரம்
பொற்குடம் என்பது திரிதல் விகாரம்
பொன்வளையல் இயல்புப் புணாச்சி
வடகிழக்கு என்பது திசைப்பெயர் புணர்ச்சி

7. **உவம உருபை விடையாகக் காணும் படி அமையும்**
வேய்புரைத் தோள் **புரை**
முழவு உறழ் தடக்கை **உறழ்**
தாயொப்ப பேசும்மகள் **ஒப்ப**
மலரன்ன சேவடி **அன்ன**



www.kalvisolai.com

கிளிபோல பேசினாள் **போல**
தேன் போன்றமொழி **போன்ற**

8. **பொழுது கொடுக்கப்பட்டு அதற்குறிய திணை கேட்கப்படலாம்**
நண்பகல் என்பது **பாலைத்** திணைக்குரிய சிறுபொழுது
மாலை என்பது **முல்லைத்** திணைக்குரிய சிறு பொழுது
வைகறை, காலை என்பது **மருதம்** திணைக்குரிய சிறு பொழுது
எற்பாடு என்பது **நெய்தல்** திணைக்குரிய சிறுபொழுது
யாமம் என்பது **குறிஞ்சி** திணைக்குரிய சிறுபொழுது

9. **வினா - விடை பகுதியில் எடுத்துக்காட்டுக் கொடுக்கப்பட்டு அது எவ்வகை வினா விடை என்று கேட்கப்படும்**
இதன் பொருள் யாது? என ஆசிரியர் கேட்டல் **அறி வினா**
பாம்போ? கயிறோ? எனக் கேட்பது **ஐய வினா**
நன்னூல் கிடைக்குமா? என கடைக் காரரிடம் கேட்பது **கொளல் வினா**
உண்டாயா? என்பதற்கு வயிறு வலிக்கும் என்பது **உறுவது கூறுதல் விடை**
ஆடத் தெரியுமா? எனும் வினாவிற்கு பாடத் தெரியும் எனக் கூறுவது **இனமொழி விடை**
இதனைச் செய்வாயா? எனில் செய்யேன் என்று கூறுவது **மறை விடை**
படித்தாயா? என்பதற்கு படிக்காமல் இருப்பேனா? என்று கூறுவது **வினா வெதிர் வினாதல் விடை**

10. **உருவகச் சொல் கொடுக்கப்பட்டு உவமையாக்குவதாக அமையும்**
மொழியமிழ்து: இவ்வுருவகத்திற்கான உவமை **அமுத மொழி**
தமிழ்த்தேன்: இவ்வுருவகத்திற்கான உவமை **தேன் மொழி**
அடிமலர்: இவ்வுருவகத்திற்கான உவமை **மலரடி**
பாதமலர்: இவ்வுருவகத்திற்கான உவமை **மலர்ப்பாதம்**
விழிக்கயல்: இவ்வுருவகத்திற்கான உவமை **கயல்விழி**

## பகுதி: 3

11. **சுருக்கமாக விடையளிக்க**
(வல்லினம் மிகும் இடம்-மிகா இடத்தை விளக்கும் வகையில் அமையும்)
வல்லினம் மிகும் இடம்
ஒரெழுத்து ஒரு மொழியில் மிகும்
தீ+சட்டி = தீச்சட்டி
தை+தேர் = தைத்தேர்
அந்த இந்த சொற்களுக்குப்பின் மிகும்
அந்த+பேனா = அந்தப்பேனா
இந்த+புத்தகம் = இந்தப்புத்தகம்
வல்லினம் மிகா இடம்
சுட்டு எழுத்தின் பின் மிகாது
அது+சட்டை= அதுசட்டை
இது+தட்டு= இதுதட்டு
இரட்டை கிளவியில் மிகாது
கட கட
தட தட
சல சல

12. **கொடுக்கப்பட்ட சொல்லை வினையெச்சமாக்குக**
    1. பெறு- **பெற்று**
    2. பசி- **பசித்து**
    3. பறி- **பறித்து**
    4. வந்தான்- **வந்து**

13. **கொடுக்கப்பட்ட தொடரை மற்றொரு தொடராக மாற்றுதல்**
    1. இளமையில் கல் --- செய்தித் தொடராக்கு
       விடை : இளமையில் கற்க வேண்டும்
    2. திருக்குறளை அனைவரும் அறிவர் (வினாத் தொடராக்கு )
       விடை : திருக்குறளை அனைவரும் அறிவரோ?
    3. இமயமலை மிகவும் உயரமானது--- (உணர்ச்சிதொடரக்கு)
       விடை : ஆ!என்னே! இமயமலையின் உயரம்!

14. **கீழக்காணும் தொடரில் ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக**
    1. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி,பெண்ணுரிமை,சொத்துரிமை
       விடை :பெண்கள் பெற வேண்டி**வை** பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
    2. அவன் கவிஞன் அல்ல. விடை : அவன் கவிஞன் அல்**லன்.**


www.kalvisolai.com

3. புலவர்கள் பொங்கல் புது நாள்களின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினர்.
விடை : புலவர்கள் பொங்கல் புது **நாளின்** மாண்பினை உணர்ந்து கொண்டாடினர்.
4. மேடைப் பேச்சுக்கு கருத்துகளே உயிர்நாடி போன்றது.
விடை : மேடைப் பேச்சுக்கு கருத்துக்களே உயிர்நாடி **போன்றவை.**
5. இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.
விடை : இயங்குருப் படங்களை குழந்தைகள் விரும்பி **பார்க்கின்றன.**
6. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருக்கின்றன.
விடை : தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தது**.
7. ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
விடை : ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் **கொண்டிருந்தாள்.**
8. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருத்தல் மட்டும் போதா.
மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருத்தல் மட்டும் **போதாது.**
9. பெண்கள் எல்லாத் துறைகளிலும் பணிபுரிகின்றாள்
விடை : பெண்கள் எல்லாத் துறைகளிலும் **பணிபுரிகிறார்கள்**

**15. சந்திப் பிழைநீக்கி எழுதுக.**

1. ஆளும் அறிவும் வளரும் முன்பாக வாழ்க்கை பயணமாம்.
விடை : ஆளும் அறிவும் வளரும் முன்பாக வாழ்க்கை**ப்** பயணமாம்.
2. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.
விடை : ஏழைகளுக்கு**ப்** பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று**த்** தந்தார்.
3. மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது
விடை : மேடை**ப்** பேச்சு மிகுந்த பயனை**த்** தரவல்லது.
4. மக்களை இலட்சிய பார்வையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடை பேச்சு
விடை : மக்களை இலட்சிய**ப்** பார்வையிலே அழைத்து**ச்** செல்லும் வன்மையுடையதே மேடை**ப்** பேச்சு.
5. திரைபடம் எடுக்கப்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
விடை : திரை**ப்**படம் எடுக்கப்படும் பட**ச்**சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
6. வள்ளலார் அருளிய வழிகளை கடைப்பிடித்து ஒழுங்கினால் மனிதநேயம் மலரும்.
விடை : வள்ளலார் அருளிய வழிகளை**க்** கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
7. கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்.
விடை : கைத்தொழில் ஒன்றை**க்** கற்றுக்கொள்.

**16. இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு தருக**

| ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரச்சம் | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| **எய்தா**ப்பழி | தருக |
| **தீரா**க்காதலன் | வருக |
| **மீளா**ஆள் | கெடுக |
| **ஏசா**ச்சிறப்பின் | புகுக |
| **தேரா**மன்னா | செய்க |
| **உரிச்சொற்றொடர்** | **செய்யுளிசையளபெடை** |
| தடகரி | உ**றாஅ**மை |
| உறுவேனில் | |
| நனிகடிது | **சொல்லிசையளபடை** |
| தடக்கை | தழீஇய |
| மாமலை | |
| மாதவர் | |
| மல்லலம் குருத்து | |
| பண்புத்தொகை | அடுக்குத்தொடர் |
| அருவினை | இவைஇவை |
| செந்தமிழ் | புதிதுபுதிது |
| நெடுநீர் | சயசய |
| நற்சங்கு | |
| எண்பொருள் | |

**17. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக**

1. வலது பக்கச் சுவற்றில் எழுதாதே.
விடை : வலப் பக்கச் சுவரில் எழுதாதே.
2. இடதுபக்கமாகச் செல். விடை : இடப்பக்கமாகச் செல்.
3. புஞ்சையும் நஞ்சையும் பூத்துக் குலுங்கின.
விடை : புன்செயும் நன்செயும் பூத்துக் குலுங்கின.


www.kalvisolai.com

18. **பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.**

1. தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சிமுல்லை மருதம் நெய்தல் பாலை எனப் ஐவகையாப் பிரித்தார்கள்.
   விடை : தமிழர்கள் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாப் பிரித்தார்கள்.
2. கதைப்படங்கள் மட்டுமின்றி கருத்துப்படங்கள் செய்திப்படங்கள் விளக்கப்படங்கள் கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

   கதைப்படங்கள் மட்டுமின்றி கருத்துப்படங்கள், செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.
3. சங்க படைப்புகள்வெறுங்கற்பனைப் படைப்புகளல்ல அவை மனிதப் பட்டறிவின் முழுவெளிப்பாடுகள் அறிவுடன் பொருந்தி வருவன அறத்தொடுநிலையாய் நிற்பன.
   விடை : சங்க படைப்புகள்வெறுங்கற்பனைப் படைப்புகளல்ல. அவை மனிதப் பட்டறிவின் முழுவெளிப்பாடுகள்; அறிவுடன் பொருந்தி வருவன; அறத்தொடுநிலையாய் நிற்பன.
4. பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள் புலவராய்பாடினியாய் விறலியாய்த் திகழ்ந்தனர்.
   விடை : பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள். புலவராய், பாடினியாய், விறலியாய்த் திகழ்ந்தனர்.
5. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்க்கை வாழ்வோம்
   விடை : சட்டத்தை மதிப்போம்; குற்றமகளைந்த வாழ்க்கை வாழ்வோம்;
6. தமிழ்மொழி சிந்தனைக் கருவூலமாய் திகழ்வது அறிவுச் சுரங்கமாய் இலங்குவது
   விடை : தமிழ்மொழி சிந்தனைக் கருவூலமாய் திகழ்வதது. அறிவுச் சுரங்கமாய் இலங்குவது.
7. மூன்றும் பச்சைக் குட்டிகள் வெளியே விட்டால் செத்துப் போகும் யாராவது எடுத்துக் கொண்டு போனாலும் வளர்க்க முடியாது என்றாள்
   விடை : "மூன்றும் பச்சைக் குட்டிகள்; வெளியே விட்டால் செத்துப் போகும் யாராவது எடுத்துக் கோண்டு போனாலும் வளர்க்க முடியாது" என்றாள்.
8. தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி கைபேசி கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன
   விடை : தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, கைபேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.

19. **கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.**

1. பாரதிதாசன் தமிழிலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்தார்.
   விடை : <u>(கொடிகட்டிப் பறந்தல் – தனிப்புகழுடன் விளங்குதல்)</u>
2. திருடன் காவலரிடம் நான் திருடவில்லை என முதலைக் கண்ணீர் வடித்தான்.
   விடை : <u>(முதலைக் கண்ணீர் -- பொய் அழுகை)</u>
3. மக்களிடம் பணத்தை வசூலித்த செல்வம் கம்பி நீட்டினான்.
   <u>(கம்பி நீட்டுதல் – சொல்லிக் கொள்ளாமல் செல்லுதல்)</u>
4. இளைஞர்கள் வேலை தேடி பஞ்சாய்ப பறக்கிறார்கள்
   விடை : <u>(இளைஞர்கள் வேலை தேடி – அலைந்து திரிகிறார்கள்)</u>
5. ஏட்டுச் சுரைக்காய் -- பட்டறிவு இல்லாத படிப்பறிவு
6. கானல் நீர் -- இருப்பது போலத் தோன்றும் ஆனால் இராதது
7. கொட்டியளத்தல் -- மிகுதியாகப் பேசுதல்
8. ஆகாயத் தாமரை -- இல்லாத ஒன்று

20. **தொகைச் சொற்களை அறிந்தெழுதுக.**

1. முக்கனி : மா,பலா,வாழை
2. மூவிடம் : தன்மை,முன்னிலை,படர்க்கை
3. முப்பால் : அறம்,பொருள்,இன்பம்
4. இருவினை : நல்வினை,தீவினை
5. இருதிணை : உயர்திணை,அஃறிணை
6. நாற்றிசை : கிழக்கு,மேற்கு,வடக்கு,தெற்கு
7. நானிலம் : குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்
8. ஐம்பால் : ஆண்பால்,பெண்பால்,பலர்பால்,ஒன்றன்பால்,பலவின்பால்
9. ஐந்திணை : குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை



www.kalvisolai.com

## பிரிவு: 3

**பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

1. **செல்வான்**

| | |
|---|---|
| செல் | -- பகுதி |
| வ் | -- எதிர்கால இடைநிலை |
| ஆன் | -- விகுதி |

2. **அறிந்து**

| | |
|---|---|
| அறி | -- பகுதி |
| ந்(த்) | -- சந்தி (த்-ந் ஆனது விகாரம்) |
| த் | -- இறந்த கால இடைநிலை |
| உ | -- விகுதி |

3. **ஔகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**
   - சொல்லின் முதலில் மட்டுமே வரும்
   - ஒன்றரை மாத்திரை அளவாக குறைந்து ஒலிக்கும்
   
   (எ.கா) – ஔவை,வௌவால்

4. **முல்லைக்குரிய கருப் பொருள்கள் யாவை?**

| | |
|---|---|
| தெய்வம் | -- திருமால் |
| விலங்கு | -- முயல்,மான்,புலி |
| யாழ் | -- முல்லை யாழ் |
| பண் | -- முல்லைப்பண் |

5. **ஒரு பொருட்பன்மொழியைச் சான்றுடன் விளக்குக.**
   - ஒரு பொருளை குறித்து, தொடந்து வரும் இரு சொற்கள்
   
   (எ.கா) உயர்ந்தோங்கி, நடு மையம்

6. **அடுக்குத் தொடர் -- இரட்டைக்கிளவிக்குரிய வேறுபாடுகள் யாவை?**

| | |
|---|---|
| சொற்கள் தனியே நிற்கும் | -- ஒன்றுபட்டு நிற்கும் |
| பிரித்தால் பொருள் தரும் | -- பிரித்தால் பொருள் தராது |
| இரண்டு, மூன்று, நான்கு, முறை அடுக்கி வரும் | -- இரண்டு முறை மட்டுமே அடுக்கி வரும் |

7. **ஒன்றொழி பொதுச்சொல்லைச் சான்றுடன் விளக்குக**

   உயர்திணை,அ∴றிணை, ஆகிய இரண்டிலும் உள்ள பொதுவான சொற்களுள் குறிப்பால் ஒரு பாலை நீக்கி மற்றொரு பாலைச் சுட்டுதல்
   
   (எ.கா) வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர்

8. **விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

   விடை எட்டுவகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சுட்டு விடை | 2. | மறை விடை |
| 3. | நேர் விடை | 4. | ஏவல் விடை |
| 5. | வினா எதிர் வினாதல் விடை | 6. | உற்றது உரைத்தல் விடை |
| 7. | உறுவது கூறல் விடை | 8. | இனமொழி விடை |

9. **வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

   வெண்பா ஆறுவகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | குறள் வெண்பா | 4. | நேரிசை வெண்பா |
| 2. | இன்னிசை வெண்பா | 5. | நேரிசை சிந்தியல் வெண்பா |
| 3. | இன்னிசை சிந்தியல் வெண்பா | 6. | ப∴றொடை வெண்பா |

10. **ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

    ஆசிரியப்பா நான்கு வகைப்படும்

| | | | |
|---|---|---|---|
| 1. | நேரிசை ஆசிரியப்பா | 3. | இணைக்குறள் ஆசிரியப்பா |
| 2. | நிலை மண்டில ஆசிரியப்பா | 4. | அடிமறி மண்டில ஆசிரியப்பா |

11. **வாகைத் திணையை விளக்குக.**

    போரில் வெற்றி பெற்றவர் வாகைப்பூ சூடி மகிழ்வர்

12. **இனங்குறித்தல் என்றால் என்ன?**
    - தன் பொருள் குறித்தல்
    - தனக்கு இனமான பொருளையும் குறித்தல் (எ.கா) கதிர்வேல் <u>வெற்றிலை</u> தின்றான்

13. **அறி வினா, அறியா வினாவை விளக்குக.**
    - தான் அறிந்த பொருள் பிறர்க்குத் தெரியுமா?
      என வினவுதல் -- அறிவினா (திருக்குறளை இயற்றியவர் யார்?)
    - தான் அறியாத பொருளை அறிந்து
      கொள்வதற்காக வினவுதல் -- அறியாவினா (எட்டுத் தொகை நூல்கள் யாவை?)



www.kalvisolai.com

**14. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பா நான்கு வகைப்படும்

1. வெண்பா 2. கலிப்பா 3. ஆசிரியப்பா 4. வஞ்சிப்பா

**15. மையீற்றுப் பண்புப் பெயர்கள் நான்கினை கூறுக.**

சிறுமை, நன்மை, இளமை, புதுமை

**16. முற்றெச்சம் என்றால் என்ன?**

ஒரு வினை முற்று எச்சப் பொருளைத் தந்து, மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் என்படும்

(எ.கா) வந்தனள்,போயினாள்

**17. மூவகை மொழிகள் (சொல்லின் வகைகள்) யாவை?**

துனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி

**18. பொதுமொழி என்றால் என்ன? எடுத்துக் காட்டுடன் விளக்குக.**

- தனித்து நின்று தன் பொருளையும்
- தொடர்ந்து நின்ற இரு பொருளையும் தருவது

பலகை -- பல+கை தாமரை -- தா+மரை

**19. தெரிநிலை வினைமுற்று – விளக்குக**

- செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆறினையும், தெரிவித்து
- காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது

(எ.கா) உழுதான்

**20. புறத்திணை எத்தனை ?அவை யாவை?**

புறத்திணை 12 வகைப்படும்

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப்படும்

| **திணை** | **பெரும்பொழுது** | **சிறுபொழுது** |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலம்,முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறுபெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில்,முது வேனில் | நண்பகல் |

21. ஆறு பெரும் பொழுதுகளும் வரும் திணைகள் யாவை?

22. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

23. பெரும்பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**24. சிறுபொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**(இதற்குரிய விடை மேலே உள்ள அட்டவணையில் உள்ளது)**

**(மேற்கண்ட அட்டவணையில் ஒரு மதிப்பெண் வினாவும் இடம் பெறும்)**

**25. செம்மொழி எவ்வாறு புணரும்?**

செம்மொழி=செம்மை+மொழி

செம்மொழி ஈறுபோதல் விதிப்படி'மை' கெட்டுப் புணர்ந்தது

**26. உவம உருபு என்றால் என்ன?**

உவமை,உவமேயம், ஆகிய இரண்டிற்கும் இடையில் வரும் உருபு ஆகும்

**27. உவம உருப்புகள் யாவை?**

போல, புரைய, நேர, நிகர, அன்ன, இன்ன

**28. சொல் என்றால் என்ன?**

ஓர் எழுத்து தனித்துநின்றோ ,பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும்

**29. வினைச்சொல் என்றால் என்ன?**

எழுவாய் செய்யும் செயல் அல்லாத தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் ஆகும்

**30. ஐகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

ஐகாரம் தன் மாத்திரையிலிருந்துகுறைந்து ஒலிப்பது ஐகாரக் குறுக்கம் எனப்படும்

ஐப்பசி - (11/2 மாத்திரை)

வளையல் - (1மாத்திரை)

மழை - (1மாத்திரை)



www.kalvisolai.com

## பிரிவு - III

### பகுதி 1

1. **வகையைத் குறிப்பிட்டு, அதன் இலக்கணம் எழுதுக.**

தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் மற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே

இது அடி மறி மண்டில ஆசிரியப்பாவை சார்ந்தது

- ➢ இப்பாடல் ஆசிரியப்பா பொது இலக்கணம் பெற்றது
- ➢ அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது
  (ஒரு பாடலில் கடைசி அடியில் மூன்று சீர்கள் இருந்தால் வெண்பா என்றும் நான்கு சீர்கள் இருந்தால் ஆசிரியப்பா என்றும் எழுதவும்)

2. **கீழுள்ள பாடலில் பயின்று வரும் பா வகையைக் குறிப்பிட்டு, அதன் இலக்கணம் எழுதுக.**

பார் மொழிகள் அத்தனைக்கும் பாங்கான நற்றாயாம்
சீர் கொண்ட செந்தமிழே சிந்தனையில் ஏற்றிடுவாய்
பார் முழுதுஞ் சாற்றிடுவாய் பாய்ந்து

இது இன்னிசைச் சிந்தியல் வெண்பா.
வெண்பாவின் பொது இலக்கணம் பெற்றுவரும்
மூன்றடிகளை உடையது
தனிச்சொல் இன்றி, ஒரு விகற்பம் அல்லது பல விகற்பத்தால் வருவது.

3. **வஞ்சப் புகழ்ச்சி அணியைச் சான்று தந்து விளக்குக.**

புகழ்வது போலப் பழித்தல், பழிப்பது போலப் புகழ்தல்

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்

கயவர், தேவர் என இணைந்து புகழ்ந்து, கயவர் மனம் போனவாறு தீயதைச் செய்து அழிவர் என பழித்தல்

4. **சொற் பொருள் பின்வருநிலை அணியை விளக்குக.**

செய்யுளில் முன்னர் வந்த சொல்லும், அதன் பொருளும் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருதல்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

'விளக்கு' எனும் சொல் ஒளி என்னும் ஒரே பொருளைத் தருகிறது.

5. **தற்குறிப் பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

கவிஞர் தன் கற்பனையை ஏற்றிக் கூறுதல்
(எ.கா) **தையல் துயர்க்குத் தரியாக தம் சிறகாம்** எனத் தொடங்கும பாடலில் கோழிகள் விடியற் காலையில் கூவுதல் இயல்பு, சூரியனைக் கோழி கூவி அழைப்பதாக கவிஞர் கூறியுள்ளார்.

6. **நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்**-அலகிட்டு வாய்பாடு தருக

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நன்/றிக்/கு | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| வித்/தா/கும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| நல்/லொழுக்/கம் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| தீ/யொழுக்/கம் | நேர் நிரை நேர் | கூவிளங்காய |
| என்/றும் | நேர் நேர் | தேமா |
| இடும்/பை | நிரை நேர் | புளிமா |
| தரும் | நிரை | மலர் |

**(இது போன்ற மற்ற குறள்களுக்கும் பயிற்சி அளிக்கவும்)**

### பகுதி: 2

### துணைப்பாடம்

1. **பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டு**
   1. ரூபாவதி, கலாவதி நாடகங்களை எழுதினார்.
   2. சித்திரகவி எழுதினார்



www.kalvisolai.com

3. ஆங்கிலம், வடமொழிப் பாடங்களை தமிழ்ப்படுத்தினார்.
4. நீதிநெறிவிளக்கம் - உரை எழுதினார்.
5. பட்ட வகுப்புகளில் தமிழை பாடத்திட்டத்திலிருந்து நீக்கும் முடிவை மாற்றினார்.

**2. அன்றாட வாழ்வில் சட்டம்**

1. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
நாம் வாங்கும் பொருளில் குறைபாடு இருப்பின் நீதிமன்றம் செல்லலாம். நுகர்வோர் உரிமை பாதுகாக்கப்படும்.
2. தகவல் அறியும் உரிமைச் சட்டம்
அரசியல் சட்டப்படி தகவல்கள் பெற உரிமை உண்டு. வரிப்பணம் எப்படி செலவாகிறது என அறிய உரிமை உண்டு. தனி விண்ணப்பம் இல்லை. ஏழைகள் தகவல் பெற கட்டணம் இல்லை.

**3. அண்ணாவின் கடிதம்**

1. சென்ற பொங்கல் நாளில் உன்னுடன் இருந்தேன். இன்று உயர்பதவி வழங்கிவிட்டாய்.
2. இன்னல்கள் இருப்பினும் பொங்கல் மகிழ்ச்சியான நாள்.
3. உழைப்பின் பெருமையை உணர்த்தும் நாள்.
4. எல்லாப் பொருளும் நிலமடந்தை தந்தது.
5. முயற்சி செய் என ஆணையிடுகிறேன்.

**4. பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன்**

1. சுறுசுறுப்பும் உழைப்பும் இவரை உயர்நிலைக்குக் கொண்டு சென்றன.
2. நடிப்பும், அரசியலும் இரு கண்கள்.
3. திரைப்படங்கள் வாயிலாக நல்ல பல கருத்துக்கள் மக்களைச் சென்றடைய முயற்சி செய்தார்.
4. புரட்சி நடிகர், மக்கள் திலகம் என அழைக்கப்பட்டார்.
5. டாக்டர் மற்றும் பாரத ரத்னா பட்டம் பெற்றார்.
6. சத்துணவுத் திட்டம் கொண்டு வந்தார்.
7. பாரத ரத்னா விருது பெற்றார்.

## பகுதி–3

**கீழக்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

“ டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே. பட் நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி? என்னோட ப்ரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச் சொல்லிக் கால் பண்ணியிருக்கிறேன்.” “சன்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்கிறதே, டோண்ட் வொர்ரி, டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹேப்பி தானே.”

**விடை:** அப்பா, வருகிற ஞாயிறு எனக்குப் பிறந்த நாள். ஆனால், நீங்க இன்னும் எனக்கு பிறந்தநாள் ஆடை எடுக்கவில்லையே, ஏன் அப்பா? என்னுடைய நண்பர்களையெல்லாம் வீட்டிற்கு வரச்சொல்லி அழைப்பு விடுத்திருக்கிறேன். ஞாயிறு வருவதற்கு இன்னும் ஆறு நாட்கள் இருக்கிறதே. கவலைப்படாதே நாளை மாலை கடைக்குப் போகலாம் இப்போது உனக்கு மகிழ்ச்சி தானே!

சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே? வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனால்தான் லேட். சரி, சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கெட் கிடச்சுதா? பஸ் டென் தர்டிக்கு வரும் லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

**விடை:**சுரேஷ் என்ன ஆயிற்று? ஏன் தாமதமாய் வருகிறாய்? வழியில் ஒரே போக்குவரத்து நெருக்கடி அதனால்தான் தாமதம். சரி சரி பேருந்து எத்தனை மணிக்கு வரும். பயணச்சீட்டு கிடைத்ததா? பேருந்து பத்து முப்பது மணிக்கு வரும். சென்ற மாதமே முன்பதிவு செய்தாயிற்று.

பள்ளியிலிருந்து வீட்டிற்குள் நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கை தூக்கிப்போட்டு விட்டு, “மம்மி வாட்டர்” என்று குரல் கொடுத்தான். பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை கால்களை வாஷ் செய்து கொண்டு வா, சூடாக உனக்குப்பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன். போய் யூனிபார்ம் மாற்றிக் கொண்டு வா என்றாள், அவன் தாய். “போம்மா” என்று கூறிக்கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டிவியைப் போட்டான். “ஸ்கூல்விட்டு வந்தவுடன் எதற்கு டிவி? ஹோம்ஒர்க் செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம்”, என்றாள் அவன் தாய்.

**விடை:** பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி தன் பள்ளிப்பையைத் தூக்கிப் போட்டு விட்டு “அம்மா” குடிநீர் என்று குரல் கொடுத்தான். பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை, கால்களைச் சுத்தம் செய்து கொண்டு வா. சூடாக உனக்குப் பிடித்தச் சிற்றுண்டியைச் செய்து வைத்திருக்கிறேன். போய் சீருடை மாற்றிக்கொண்டு வா, என்றாள் அவன் தாய். போம்மா என்று கூறிக்கொண்டு மின்விசிறியைச் சுழலவிட்ட பாரி,



www.kalvisolai.com

தொலைக்காட்சியை இயக்கினான். “பள்ளிவிட்டு வந்தவுடனே எதற்கு தொலைக்காட்சி? வீட்டுப் பாடம் செய்து விட்டு அப்புறம் பார்க்கலாம், என்றாள் அவன் தாய்.

**கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ௩ | ௪ | ரு | ௬ | எ | அ | ௯ | க0 |

**பழமொழி**

| | | |
|---|---|---|
| knowledge is power | - | அறிவே ஆற்றல் |
| Covert all lose all | - | பேராசை பெரு நஷ்டம் |
| Diamonds cut diamonds | - | முள்ளை முள்ளால் எடு |
| Old is gold | - | முன்னோர் வாக்கு முத்தானது |
| Prevention is better than cure | - | வருமுன் காப்பதே சிறந்தது |
| Tit for tat | - | பழிக்குப் பழி |
| Time is gold | - | காலம் பொன் போன்றது |
| The face is the index of the mind | - | அகத்தின் அழகு முகத்தில் தெரியும் |
| Barking dog seldom bite | - | குரைக்கிற நாய் கடிக்காது |
| All that glitters is not gold | - | மின்னவதெல்லாம் பொன்னல்ல |
| There is no smoke without fire | - | நெருப்பில்லாமல் புகையாது |
| Self help is the best help | - | தன்கையே தனக்கு உதவி |
| Efforts never fail | - | முயற்சிகள் தோற்பதில்லை |
| Live and let live | - | வாழ், வாழ விடு; |
| Look before you leap | - | ஆழம் தெரியாமல் காலை விடாதே |
| Haste makes waste | - | பதறாத காரியம் சிதறாது |

**மொழியாக்கம்**

Trees are very useful to us. They give us, timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil seeds of some trees. The leaves and fruit of some trees are used to prepare medicines.

மரங்கள் நமக்கு மிகவும் பயனளிக்கிறன. மரக்கட்டையும், விறகையும் மரங்கள் தருகின்றன. நாற்காலிகள் மேசைகள் மற்றும் பல கலைப் பொருள் செய்ய மரக்கட்டை உதவுகிறது. சில விதைகளிலிருந்து எண்ணெய் கிடைக்கிறது. சில மரங்களின் இலை, கனி ஆகியவை மருந்து தயாரிக்கப் பயன்படுகிறன.

Early to bed and early to rise make a man healthy, wealthy and wise. The early riser has more time and energy to prepare for the day’s work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult study is made easy.

“ முன் தூங்கி முன் எழுதல்” ஒருவனை உடல் நலமுடையவனாக, அறிவு உடையவனாக ஆக்கும். தாமதமாய் எழுபவனை விட அதிகாலையில் எழுபவனுக்கு அன்றாட வேலைகளைக் கவனிக்க அதிக நேரமும், சக்தியும் கிடைக்கிறது. அவன் தன்னை புத்துணர்ச்சி உடையவனாகவும், சுறுசுறுப்பு உடையவனாகவும் உணர்கிறான். பாடம் படிக்க அதிகாலை நேரமே உகந்தது. மனம் தெளிவாக இருப்பதால் கடினமான பாடப்பகுதி கூட எளிதாகிறது.

## பகுதி - 4

**கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக**

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தம்தம் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்த விடியற்காலை நேரத்தில் குமரன்....

(அல்லது)

**எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதிப் பழகுக**

1. மழை 2. கடல் 3. பள்ளி 4. வானம் 5. இயற்கைக் காட்சி



www.kalvisolai.com

37. கீழ்க்காணும் பாடலின் திரண்டக் கருத்தை எழுதி அப்பாடலில் அமைந்துள்ள ஏதேனும் ஐந்து நயங்களை எழுதுக

சோற்றைஅள் ளுங்கால் துவள்வாழைத் தண்டிலூறும்
சாற்றைப்போ லேவடியத் தக்கவண்ணம் -- ஊற்றுநெய்யை
வாழை யிலையின் அடிஉ ண்பார் வலப்புறத்தில்
வீழ விரித்துக் கறிவகைகள் -- சூழவைத்துத்
தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோ றிடுமுன் மிகஇனிக்கும் -- பண்ணியமும்
முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின் சோறிட்டுத் -- தக்கபடி
கேட்கும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சுமன்பால்
ஊட்டுதல்வேண் டும்தாய்போல் ஒண்டொடியே !

ஏற்புடைய நயங்கள் :

தொடை நயம் :

**எதுகைச்சுவை :**

சோற்றை -- சாற்றை
வாழை -- வீழ
தண்ணீர் -- வெண்சோறு
முக்கனி -- ஒக்கநின்றே

இச்சொற்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து எதுகைச் சுவை நயமாய் அமைந்துள்ளது.

**மோனை :**

வாழை — வலப்புறம்
தண்ணீர் -- தனித்தனியே

இச்சொற்களில் முதல் எழுத்து ஒன்றி வந்து மோனைச் சுவையைப் பெற்றுள்ளது.

**முரண் :**

தண்ணீர் வெந்நீர்
கெஞ்சி மிஞ்சியும்

இவை எதிர்மறை பொருளில் வந்த முரண் சுவையாகும்.

**திரண்ட கருத்து :**

அள்ளி உண்ணும் உணவில் இளம்வாழைத் தண்டிலிருந்து சொட்டும் சாறுபோல் நெய் சொட்டுமாறு நெய்யை ஊற்றவும்

உண்பவரின் வலப்புறத்தே அடி இலை இருக்குமாறு இலையை விரித்து வைத்து கறிவகைகளையும், கூட்டுவகைளையும் பரிமாறியும்

தண்ணீர், வெந்நீர் தனித்தனி சொம்பில் வைத்தும் மிகவும் இனிமை தரும் முப்பழ வகைகளை தேனில் மூழ்கவைத்து எடுத்து இலையிலிட்டும்

ஒத்தக்கருத்துடன் அருகிலிருந்தும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிகுந்த அன்பு காட்டியும் தாயைப் போல சோறூட்ட வேண்டும் பெண்ணே என பாரதிதாசனார் குறிப்பிடுகின்றார்.

**மையக் கருத்து :**

தாய் தன் குழந்தைக்கு சோறூட்டுதல் போல பெண்கள் குறிப்பறிந்து உணவு வழங்குதல் வேண்டும்.

**சொல்நயம் :**

துவள்வாழைத் தண்டிலூறும் சாறு
கெஞ்சியும் மிஞ்சுமன்பால் போன்ற சொற்கள் நயமாகக் கையாளப்பட்டுள்ளன.

**அணி நயம் :**

வாழைத்தண்டிலூறும் சாற்றைப் போல வடிய நெய் ஊற்று
ஊட்டுதல் வேண்டும் தாய் போல்

இத்தொடர்கள் அமைந்து இச்செய்யுளுக்கு உவமை அணி நயத்தை வழங்கி சிறப்பிக்கிறது.

**சந்த நயம் :**

சந்தம் பாட்டிற்குச் சொந்தம்.

'தானன தன்னா தனதான தன்னான' என்னும் சந்த நயம் இப்பாடலுக்கு இசையின்பம் சேர்க்கின்றது.




www.kalvisolai.com

## பகுதி:6

**கீழுள்ள படிவத்தை நிரப்புக**

வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம்



................ கிளை நாள்................

இடம்..........................

சேமிப்புக் கணக்கெண்..........................

பெயர்..........................

ரூபாய்.......................... ரூ.

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி/கிளை | தொகை ரூ, |
|---|---|---|
| | | |

காசோலை விவரம்:

தொகை

காசாளர் எழுத்தர் / மேற்பார்வையாளர்

................................ கிளை நாள்................

இடம்..........................

சேமிப்புக் கணக்கெண்..........................

நிலையான கணக்கெண் (PAN)

பெயர்.......................... ரூ.

ரூபாய்..........................

காசோலை விவரம்: பண விவரம் :

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி/கிளை | தொகை ரூ, |
|---|---|---|
| | | |
| | | |

செலுத்துநர் கையொப்பம்

| நாள் | தொகை |
|---|---|
| 1000 × | |
| 500 × | |
| 100 × | |
| 50 × | |
| 20 × | |
| 10 × | |
| 5 × | |
| காசுகள் | |
| மொத்தம் | |

## பகுதி 7

**கீழக்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க**

அ) மாறன், வளவனின் நெருங்கிய நண்பன். சில நாட்களாக உடல்நலமில்லாமல் இருந்த மாறன் நேற்று எதிர்பாராதவிதமாக மாடிப்படியிலிருந்து கீழே விழுந்ததில் முற்றிலுமாக தன் நினைவை இழந்து விட்டான். மாறனின் நிலைக்கண்டு வளவன் மிகவும் மனவருத்தமடைந்தான். உணவு உண்பதற்குக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மனவருத்தம் பெற்றோருக்குத் தெரிந்திருந்தது. அவர்கள் எவ்வளவுதான் கூறினாலும் அவனால் நண்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கி கொள்ள இயலவில்லை.

வளவன், ஏன் மனவருத்தத்தோடு இருந்தான்?

நமக்குத் தாங்கமுடியாத துன்பம் ஏற்படும் போது அதிலிருந்து மீள வழி யாது?

இச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?

ஆ) விழிமாற்று திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடு நேரமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் கடந்து செல்கின்றனர். ஆனால் அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?

பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?

**(இது போல வேறு சில பகுதிகளைக் கொடுத்து பயிற்சி அளிக்கவும்)**

## பிரிவு IV

### பகுதி-1

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க**

அ) நும் ஊருக்குக் குடிநீர் வசதி செய்து தருமாறு மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் வரைக.

ஆ) தட்டச்சர் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப்பட்டியல் உருவாக்குக.



www.kalvisolai.com

இ) பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

ஈ) வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டி கடிதம் எழுதுக.

உ) பேருந்து வசதி வேண்டி போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

**(இக்கடிதங்களைப் பயிற்சி செய்து பார்க்கவும்)**

## பகுதி–2

### கட்டுரை : 1. உயர்தனிச் செம்மொழி

**முன்னுரை**

உலகம் தோன்றியபோது தோன்றிய மொழி தமிழ்மொழி. உலகின் முதல் மனிதன் பேசியமொழி தமிழ்மொழி. காலத்தால் மூத்த மொழி. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் உடைய தூய மொழி. தமிழின் தனிச் சிறப்புகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தனித்தன்மை**

அழியாத இலக்கிய, இலக்கண வளமே தமிழ்மொழியின் தனித்தன்மையாகும். பேச்சு மொழியாக, எழுத்து மொழியாக, ஆட்சிமன்ற மொழியாக, நீதி மன்ற மொழியாக தமிழ் விளங்குகிறது. பிறமொழிகளால் நெருங்க இயலாத பெருமையை உடையது.

**இலக்கிய, இலக்கண வளம்**

இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகளைக் கொண்டது தமிழ்மொழி. சங்க இலக்கியங்கள் அனைத்தும் வாழ்வியல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவை. தமிழ்மொழி நுண்ணிய அறிவை உண்டாக்க வல்ல இலக்கண வளமுடையது.

**பொதுமைப் பண்பு**

நம் தமிழ்மொழி,

"ஒன்றே குலம், ஒருவனே தேவன்"

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்"

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" – என்பன போன்ற பொதுமைப் பண்புகள் நிரம்பிய மொழி.

**நடுவு நிலைமை**

தமிழ்மொழி இனம், மொழி, மதம் கடந்த இலக்கியங்களைக் கொண்டது. அறத்தின் அடிப்படையில் தோன்றிய அமுதமொழி. உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளைப் பெற்ற செம்மொழி.

**முடிவுரை**

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த தமிழ் மொழியின் பெருமையைக் காப்பது நமது கடமையாகும்.

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"!

### 2. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

**முன்னுரை**

நம்மைச் சுற்றியிருக்கும் இடங்களையும் இயற்கைச் சூழ்நிலைகளையும் மாசுபடாமல் பாதுகாப்பாதே சுற்றுச் சூழல் பாதுகாப்பாகும். நம்மைக் காக்கும் பூமியை நாமும் பாதுகாக்க வேண்டும். சுற்றுச் சூழல் பாதுகாப்பின் அவசியம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நிலத்தூய்மை**

இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றை விளைநிலங்களில் பயன்படுத்துவதால் மண் வளம் மாசுபடுகிறது. வேளாண்மையில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தால் மண் வளத்தைப் பாதுகாக்க முடியும்.

**நீர்த் தூய்மை**

நோய்கள் பெருக மாசுபட்ட நீரே காரணம். கழிவு நீரையும், இரசாயனக் கழிவு நீரையும் நீர்நிலைகளில் கலப்பதால் நீர் மாசுப்படுகிறது. தொழிற்சாலைகளின் கழிவு நீரை மறுசுழற்சி செய்ய வேண்டும். வீட்டுக் கழிவு நீரை சரியான முறையில் வெளியேற்ற வேண்டும்.

**காற்றுத் தூய்மை**

தொழிற்சாலை புகை, வாகனப் புகை போன்றவற்றால் வளிமண்டலம் மாசுப்படுகிறது. அதிக அளவில் மரங்களை வளர்ப்பதன் மூலம் காற்றைத் தூய்மையாக்க முடியும்.



www.kalvisolai.com

**முடிவுரை**

குப்பைகளைக் கண்ட இடங்களில் கொட்டக் கூடாது. மறுசுழற்சி செய்ய முடியாத நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது.

"சுற்றுச் சூழல் காப்போம்!
நோயின்றி வாழ்வோம்!!"

## 3.காலத்தை வெல்லும் கணினி

**முன்னுரை**

அறிவியலின் அற்புதப் படைப்பான கணினி இன்று மனித மூளையையும் விஞ்சிவிட்டது. கடந்த காலத் தகவல்களைத் தருவதோடு எதிர்காலத்திற்கு வேண்டியவற்றையும் உருவாக்குகிறது.

**தோற்றம்:**

கணினியை ஆலன் எம். டூரிங் என்பவர் 1824-ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். தற்போதைய கணினியை டாக்டர். ஹோலண்ட் என்பவர் 1944-ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். சூப்பர் கணினியை வானடேஸஸ் என்பவர் 1976-ஆம் ஆண்டு உருவாக்கினார்.

**அற்புதம்**

அறிவியல், கணிதம், மருத்துவம், வணிகவியல் என அனைத்துத் துறைகளிலும் பயன்படும் நிலை கணினிக்கு உள்ளது. நூறு மில்லியன் கணக்குகளைக் கூட சரிபார்க்கும் அளவிற்குக் கணினி வளர்ந்துள்ளது.

**சிறப்பு**

கணினி ஏவுகணை, செயற்கைக்கோள் போன்றவற்றையும் கட்டுப்படுத்துகிறது. மனி அஞ்சல் அனுப்பவும் கணினி துணைபுரிகிறது.

**தமிழ் இணையப் பல்கலைக் கழகம்**

கணினியின் சிறப்பறிந்து தமிழக அரசு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கியுள்ளது. உலக மக்கள் தமிழ்மொழியை அறிந்து கொள்ள "ரோமனைஸ்டு" என்ற விசைப் பலகையையும் உருவாக்கியுள்ளது.

**முடிவுரை:**

அனைத்துப் பள்ளிகளிலும், கணினிக் கல்வி தரமாகக் கற்பிக்கப்படுகிறது. கணினியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தி வாழ்வை வளமுடையதாக்குவோம்.

"அறிவியல் இல்லையேல் அகிலம் இல்லை"

## 4. மழைநீர் சேகரிப்பு

**முன்னுரை**

மழை பெய்யும் காலங்களில் மழைநீர் வீணாகாமல் நிலத்துக்கு அடியில் சேமிப்பதையே மழைநீர் சேகரிப்பு என்கிறோம். மழைநீர் சேகரிப்பின் அவசியம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பற்றாக்குறை ஏன்?**

மக்கட்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப நீர்நிலைகள் பெருகவில்லை. கிடைத்த நீரையும் நாம் சரியான முறையில் பாதுகாக்கவில்லை. எனவே தான் கோடை காலங்களில் கடும் வறட்சி நிலவுகிறது.

**மழைநீர் சேகரிப்பு**

நிலத்தடி நீர்வளம் குறைந்து விட்டது. போதிய அளவு மழையும் பெய்வதில்லை. மழை பெய்யும் காலத்தே வீணாகும் மழைநீரை பூமிக்கடியில் சேகரிக்க வேண்டும். வீடுகளில் தொட்டிகள் அமைத்தும், நீர்நிலைகளை ஆழப்படுத்தியும், புதிய அணைகள் கட்டியும் மழைநீரை சேமிக்கலாம்.

**பயன்கள்**

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், கடல்நீர் நிலப்பகுதியின் உட்புகுவதைத் தடுக்கவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், எதிர்காலத் தலைமுறையின் தண்ணீர் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மழைநீரை சேகரிக்க வேண்டும்.

**முடிவுரை**

மரங்களை வளர்த்து மழைவளம் பெருக்க வேண்டும். தண்ணீர்ப் பற்றாக்குறையை முற்றிலுமாகப் போக்க வேண்டும்.



www.kalvisolai.com

## ஆசிரியர் குழுவின் ஆலோசனைகள்

ஆசிரியப் பெருமக்களுக்கு வணக்கம்.

இக்கையேடு மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மட்டும் கொடுத்து பயிற்சி அளிக்கவும். மனப்பாடச் செய்யுள் (முழுவதும்) பயிற்சி அளிக்கவும்.

அலகிடல், வாழ்வியல் திறன் (சூழ்நிலை), மொழியாக்கம், செய்யுளுக்கு வினா–விடை, வங்கிப்படிவம் போன்றவற்றில் கூடுதலாக மாதிரிகள் கொடுத்து பயிற்சி அளிக்கவும்.

நெடுவினா, சிறுவினா, துணைப்பாடம், பொதுக்கட்டுரைகள் ஆகியவற்றில் கருத்துகள் மிகக் குறைவாகவே கொடுக்கப்பட்டுள்ளன. அதை மட்டுமே அவர்கள் படித்து எழுதினால் போதுமானது.

செய்யுள், உரைநடையில் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு மதிப்பெண் வினாக்களில் விடைகளை பாடவாரியாகத் தொகுத்து எழுதினால், சிறு வினாவிற்கும், நெடு வினாவிற்கும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பாடவாரியாக உள்ள சிறுவினா, நெடுவினாக்களுக்குரிய விடைகளைப் பிரித்து எழுதினால் குறுவினாக்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மெல்லக் கற்கும் மாணவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மையைப் போக்கி **"செல்ல மாணவர்கள்"** என்று உற்சாகப்படுத்தி கற்பித்துப் பயிற்சி அளியுங்கள்.

இந்த குறைவான பகுதிகளையும் அழகான கையெழுத்துடனும், எழுத்துப் பிழையின்றியும் அடிக்கடி சிறு சிறு தேர்வுகள் மூலம் எழுதிப்பார்த்தால் வெற்றி நிச்சயம்.

**"வாழ்க வளமுடன்"** **ஆசிரியர் குழு**



www.kalvisolai.com

## பள்ளி மாணவர்களுக்கு தமிழக அரசின் நலத்திட்டங்கள்

- விலையில்லா மடிக்கணினி
- விலையில்லா மிதிவண்டி
- விலையில்லா பாடநூல்கள்
- விலையில்லா பாட ஏடுகள்
- விலையில்லா சீருடை
- விலையில்லா காலணி
- விலையில்லா பேருந்து பயண அட்டை
- விலையில்லா புத்தகப் பைகள்
- விலையில்லா புவியியல் வரைபடங்கள்
- விலையில்லா கணித உபகரணப் பெட்டி
- விலையில்லா வண்ணப் பென்சில்கள்
- சத்துணவுத் திட்டம்
- சிறப்புக் கட்டணம் இல்லாத கல்வி
- தமிழ் வழி மாணவர்களுக்கு தேர்வுக் கட்டண விலக்கு
- பெண் கல்வி ஊக்குவிப்புத் தொகை
- கல்வி உதவித்தொகை
- இடைநிற்றலைத் தவிர்க்க சிறப்பு வைப்புத் தொகை (10 முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு)
- வருமானம் ஈட்டும் பெற்றோர் விபத்தினால் இறந்தால் ரூ.50,000 உதவித் தொகை
- பள்ளி மூலம் சாதி, வருவாய் மற்றும் இருப்பிடச் சான்றுகள்
- ஸ்மார்ட் கார்டு
- ஸ்மார்ட் வகுப்பு

இது போன்ற இன்னும் பல திட்டங்கள்

ஆதலால்

**தொடர்ந்து பயில்வீர் !** **பயன் பெறுவீர் !!**

www.kalvisolai.com